(ii) பட்டுக்கோட்டைத் தாலூக்காவில் விவசாயிகளுக்கு வரிவஜா, கடன் ஒத்திவைப்பு போன்ற உதவிகள் செய்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. எம். சுரேந்திரன் அவர்கள்ஒரு அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்.

திரு. எம். சுரேந்திரன் : ஐயா, பட்டுக்கோட்டை தாலூகா கடைமடை பகுதிகளான தாமரங்கோட்டை, அத்திவெட்டி, பிச்சனக்காடு, கிருஷ்ணபுரம், கல்யாண ஓடை, தம்பிக்கோட்டை; மறவக்காடு, பரக்கலக் கோட்டை, மஞ்சவயல், செங்கப்படுத்தான் காடு, இராசியக் காடு, சுந்தரநாயகிபுரம், நரசிங்கபுரம், கருங்குளம், கரிசங்காடு, அதிராம்பட்டினம், இராசமடம்; ஏரிபுறகரை, மகிழங்கோட்டை, நொக்காவிக்காடு, சேண்டாகோட்டை, பள்ளிகொண்டான், முதல்சேரி, புதுக்கோட்டை, பழஞ்சூர், மழவேணிர்காடு, துவரங்குறிச்சி, அணைக்காடு, பொன்னவராயக் கோட்டை, மன்னங்காடு, சாசங்காடு ஆகிய கிராம விவசாயிகளுக்கு ஜனவரியிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்காததால் அவர்களின் விவசாயம் கெட்டுப் பெருங் கஷ்டங்களுக்குள்ளாகியிருக்கிறார்கள். இவர்களுக்கு வரிவஜா, கடன் ஒத்திவைப்புப் போன்ற உதவிகள் செய்வது குறித்து அவசரமும் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள சில கிராமங்களுக்குப் போதிய பாசன நீர் கிடைக்காததாலும் அதன் காரணமாக விளைச்சல் தவறியதாலும் அக் கிராமங்களில் உள்ள உழவர்களுக்கு நேரிட்டுள்ள துன்பத்தைப் போக்கும் வகையில் நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன் வசூலை ஒத்தி வைத்தல் போன்ற உதவிகளை அளிக்க வேண்டும் என்று நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலவரியைத் தள்ளுபடி செய்தல்.—மேட்டூர் அணையில் நீர்த் தேக்கம் குறைந்த அளவில் இருந்த காரணத்தினால், தாளடிப் பயிர்களுக்கு, முக்கியமான கடைமடைப் பகுதிகளில் இருந்த தாளடிப் பயிர்களுக்குப் போதிய நீர் வழங்கப்படவில்லை. ஆகவே சில பகுதிகளில் பயிர்கள் விளையாமல் சாவியாகி விட்டன. இருந்த போதிலும் எல்லா இடங்களிலுமே பயிர்கள் சாவியாகிவிடவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்யவும், அவசியமானால் இப்போது பணியாற்றி வரும் சிறப்புப் பணியாளர்கள் அனைவரையும் இக் காரியத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டு பயிர்களை அறுவடை செய்யுமுன் பயிர் மதிப்பீடு செய்யுமாறும் மறு பயிர் மதிப்பீடு செய்து முடிக்குமாறும் கலெக்டர் தன்னுடைய சார்நிலை அதிகாரிகளுக்கு ஏற்கெனவே கட்டளைகள் அனுப்பியுள்ளார்கள். தகுதியுடையோர் அனைவருக்கும் விரைவில் வரித் தள்ளுபடி வழங்கும்படி கோட்ட அதிகாரிகளுக்கும் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. பட்டுக் கோட்டை வட்டத்தில் ஏறத்தாழ 30,000 ஏக்கர் பரப்பில் பயிரிடப் பட்ட தாளடிப் பயிரில் இதுவரை 15,000 ஏக்கர் பரப்பில் மட்டுமே

அறுவடையாகியுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு விதிகளின்படி விரைவில் வரித் தள்ளுபடி வழங்கும் பொருட்டு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடன் வசூலை ஒத்திவைத்தல்.—ஒரு சில பகுதிகளில் மட்டுமே தாளடிப் பயிர் சாவியாகிவிட்டன. ஏனைய பகுதிகளில் போதிய தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் விளைச்சல் குறைந்துள்ளது. தவிர, பாசனத்திற்குப் போதிய அளவில் தண்ணீர் கிடைக்காததால் சில பகுதிகளில் இரண்டாம் போகம் பயிர் மட்டுமே பாதிக்கப்பட்டது. அவ்விடங்களில் முதல் போகம் நன்றாகவே விளைந்து அறுவடை செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், போதிய நீர் கிடைக்காத காரணத்தினால் பெருமளவில் அல்லது எல்லா இடங்களிலுமே பரவலாகப் பயிர் சாவியாகிவிட்டது என்று சொல்வதற்கு இயலாது. ஆகவே, கடன் தவணைகள் வசூல் முழுவதையும் ஒத்திவைக்க வேண்டிய நியாயமில்லை என்றாலும், குறிப்பாக இடர்ப்பாட்டிற்குட்பட்டவர்கள் குறித்து தகுதி அடிப்படையில் ஆலோசனை செய்து பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. 1967-68-ம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிக் கோரிக்கைமீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றும் ஒரு மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற வேண்டியிருப்பதால் முதலில் பேசுகிற உறுப்பினர் பத்து நிமிடங்களும், மற்ற உறுப்பினர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்திற்கு அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கும் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தையொட்டி என் பேச்சைத் துவங்க விரும்புகிறேன். என் வெட்டுத் தீர்மானம் என்னவென்றால்—

"To discuss the failure of the Police to quell the outbreak of violence promptly when it broke out in the city of Madras on and from 25th March 1968, I move "that the allotment of Rs. 31,43,900 under Demand No. 12—Police be reduced by Re. 1".

இந்த மன்றத்தில் இந்த உரையைத் துவங்குகிறபோது நேற்றும், நேற்றைய முன்தினமும் நடைபெற்ற துக்ககரமான நிகழ்ச்சிகளும் அதன் விளைவுகளும், இங்கு இந்த அவையில் நம் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையினருக்கும், மாநில மக்களுக்கும் விடுத்த அறிக்கை, இவை அத்தனையையும் மனதில் கொண்டு மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு பேச விழைகிறேன். அதே நேரத்தில் இந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையில் ஒன்றைதான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 25-ம் தேதி மாலையில் நகரத்தில் ஏதோ சிறு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகள் ஆரம்பித்த உடனே தக்க முறையில் அவைகள் தீர்க்கப்பட்டிருக்குமானால் அல்லது தகுந்த முறையில் போலீஸ் தலையிட்டு, ஆட்சியினர் தலையிட்டு அதைத் தீர்த்திருப்பார்களானால்,